RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 263 | செப்டம்பர்.24 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## நலத்திட்ட உதவிகளை விரைந்து வழங்க அரசு அலுவலர்களுக்கு உதயநிதி அறிவுறுத்தல்

விருதுநகர்: செப்.24-

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை விரைவாக பரிசீலனை செய்து நலத்திட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என அரசுத்துறை அலுவலர்களுக்கு தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

விருதுநகரில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக துணை முதல்வர் ஸ்டாலின் நேற்று காலை சென்னையிலிருந்து விமானம் மூலம் மதுரை வந்தார். அங்கிருந்து கார் மூலம் விருதுநகர் வந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு, அரசு விருந்தினர் மாளிகை அருகே திமுக சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



வருவாய்த்துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் தலைமையில் சீனிவாசன் எம்.எல்.ஏ, சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா மற்றும் கட்சி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஏராளமானோர் திரண்டு வந்து வரவேற்பு அளித்தனர். அரசு சார்பில் மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா பூங்கொத்து கொடுத்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை வரவேற்றார்.

பின்னர், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற அனைத்து துறை அலுவலர்களுடனான கலந்தாய்வு கூட்டத்தில் துணை முதல்வர் ஸ்டாலின் பங்கேற்றார். அப்போது, உங்களுடன் ஸ்டாலின் திட்டம், பெறப்பட்ட மனுக்களின் விவரம், நிலுவையில் உள்ள மனுக்கள் விவரம், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம், உங்கள் தொகுதியில் ஸ்டாலின், முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் விவரம், இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித்தொகை, பெண்களுக்கான உரிமைத் தொகை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அதிகாரியிடம் கேட்டறிந்தார்.

மேலும், நிலுவையில் உள்ள மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கவும் பொது மக்களுக்கான நலத்திட்ட உதவிகளை விரைந்து செயல்படுத்தவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். முன்னதாக, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த "இந்தியாவின் விளையாட்டு தலைநகர் சென்னை" என்ற தலைப்பில் அமைக்கப்பட்டிருந்த புகைப்பட கண்காட்சியையும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார்.

அதைத் தொடர்ந்து சாத்தூரில் தனியார் திருமண மண்டபம் ஒன்றில் சாத்தூர், அருப்புக்கோட்டை, ரொம்ப கோட்டை பகுதிகளை சேர்ந்த திமுக நிர்வாகிகளுடனான கலந்தாய்வு கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று தேர்தல் தொடர்பாக பணிகளை விரைவுப்படுத்துவது குறித்து ஆலோசித்தார்.

தொடர்ந்து, விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கில் இன்று மாலை நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று, 837 பயனாளிகளுக்கு ரூ.10.84 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்.




## குடியரசு துணைத் தலைவர் ராதாகிருஷ்ணனின் முதல் நிகழ்ச்சி: பிரதமர் மோடியின் உரை குறித்த 4 புத்தகங்கள் வெளியீடு

புதுடெல்லி: செப்.24-

குடியரசுத் துணைத் தலைவராக சி.பி. ராதாகிருஷ்ணன் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு தனது முதல் பொது நிகழ்ச்சியாக பிரதமர் நரேந்திர மோடியின் உரை குறித்த புத்தக வெளியீட்டு விழாவில் நேற்று கலந்து கொண்டார். குடியரசு துணைத் தலைவர்களாக இருந்த எம்.வெங்கையா நாயுடு மற்றும் ஜெகதீப் தன்கர் ஆகியோரும் தங்களது பதவிக்காலத்தில் பிரதமர் மோடி குறித்த புத்தகங்களை வெளியிட்டுள்ளனர்.

மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் டெல்லியில் நேற்று ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி உரை தொடர்பான புத்தகங்களை குடியரசு துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன் வெளியிட்டு பேசியதாவது: அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இந்தியா மீது 50% வரி விதித்தாலும் பிரதமர் மோடியை தனது சிறந்த நண்பர் என பாராட்டி வருகிறார்.

அதேபோன்றுதான், சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் சர்வதேச அரசியலில் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் மோடியை நல்ல நண்பராக ஏற்றுக் கொண்டுள்ளார். அவர் சிறந்த சர்வதேச ராஜதந்திரவாதி. அதனால்தான் பிரதமர் மோடி சாத்தியமற்றதை சாத்தியமாக்கி வருகிறார்.


எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் மனித குலத்துக்கு சேவை செய்ய உங்கள் இதயத்தில் விருப்பம் இருந்தால், தானாகவே நீங்கள் ஒரு வழியை கண்டறிவீர்கள். உலகளாவிய சக்தியாக நாம் மாறுவதற்கான விருப்பம் ஆதிக்கம் செலுத்த அல்ல. உலகளாவிய நலனுக்காக. பிரதமரின் உரைகளைப் படிக்கும்போது, பிரச்சினைகளுக்கான அணுகுமுறை, எண்ணங்களைப் பற்றிய ஆழமான புரிதல் மற்றும் மக்களின் உணர்வுகளை ஒரு சிறந்த தலைவரால் எவ்வாறு புறக்கணிக்க முடியாது என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

அதுதான் பிரதமர் மோடியின் முதன்மையான முன்னுரிமை. அரசின் நலத்திட்டங்கள் சமூகத்தின் கடைசி நபரை சென்றடைவதை உறுதி செய்வதே அவரது விருப்பம். தேசத்தின் வளர்ச்சியில் பிரதமரின் பங்களிப்பு மற்றும் கனவுகளைப் புரிந்துகொள்வதற்கு இந்த புத்தகங்கள் முக்கியம். இவ்வாறு ராதாகிருஷ்ணன் பேசினார்.

## வடகிழக்கு மாநிலங்களுக்கு இரட்டை போனஸ்: அருணாச்சலில் ரூ.5,100 கோடி திட்டங்களை தொடங்கி பிரதமர் பெருமிதம்

இடாநகர்: செப்.24-

அருணாச்சல பிரதேச தலைநகர் இடாநகரில் நேற்று நடைபெற்ற நலத்திட்ட விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். அப்போது ரூ.5,100 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களை அவர் தொடங்கிவைத்தார். சில திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். குறிப்பாக அருணாச்சல பிரதேசத்தில் இருநீர் மின் திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். மேலும் அருணாச்சல பிரதேசத்தின் தவாங்கில் 9,820 அடி உயரத்தில் அதிநவீன மாநாட்டு மையம் அமைக்கவும் அவர் அடிக்கல் நாட்டினார்.



விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: நாட்டில் முதல் சூரியோதயம் அருணாச்சல பிரதேசத்தில் தொடங்குகிறது. ஆனால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மாநில மக்களின் வாழ்க்கையில் விடியல் பிறக்கவில்லை. கடந்த 2014ம் ஆண்டில் பிரதமராக பதவியேற்றது முதல் வடகிழக்கு மாநிலங்களுக்கு முன்னுரிமை அளித்து வருகிறேன். இதன்காரணமாக ஒட்டு மொத்த வடகிழக்கும் அபரிதமாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. என்னை பொறுத்தவரை மக்களே கடவுள்.

கடந்த 10 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் அருணாச்சல பிரதேசத்தின் வளர்ச்சிக்காக ரூ.6,000 கோடி மட்டுமே செலவிடப்பட்டது. தேசிய ஜனநாயக கூட்டணியின் 10 ஆண்டு கால ஆட்சியில் அருணாச்சல பிரதேசத்தின் வளர்ச்சி திட்டங்களுக்காக ரூ.1 லட்சம் கோடி செலவிடப்பட்டு இருக்கிறது. காங்கிரஸை விட பாஜக ஆட்சிக் காலத்தில் 16 மடங்கு அதிகமாக நிதி வழங்கப்பட்டு இருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு அருணாச்சல பிரதேசத்தில் சேலா சுரங்கப் பாதை திறக்கப்பட்டது. இந்த சுரங்கப்பாதை மாநிலத்தின் அடையாளமாக மாறியிருக்கிறது. மக்களின் போக்குவரத்து எளிதாகி உள்ளது. சுற்றுலா துறை வளர்ச்சி அடைந்திருக்கிறது. இடாநகர் விமான நிலையத்தில் புதிய முனையம் கட்டப்பட்டு உள்ளது. வடகிழக்கின் 8 மாநிலங்களையும் அஷ்டலட்சுமியாக வழிபடுகிறேன்.

வரும் 2047ம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. அந்த லட்சியத்தை எட்ட ஒவ்வொரு மாநிலமும் முன்னேற வேண்டும். தற்போது ஜிஎஸ்டி வரி குறைக்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் நாடு முழுவதும் சேமிப்பு திருவிழா தொடங்கி உள்ளது. இதனால் அருணாச்சல பிரதேச பெண்கள் பெரிதும் பயன் அடைவார்கள்.

உங்களது மாதாந்திர செலவு கணிசமாக குறையும். இந்த நேரத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களை மட்டுமே வாங்க வேண்டும். ஒவ்வொரு கடைக்காரரும் சுதேசி பொருட்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். அனைத்து ஒன்றிணைந்து சுதேசி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

வடகிழக்கு மக்களுக்கு பண்டிகை காலம் ஒரு போனஸாக அமைந்துள்ளது. அதோடு ஜிஎஸ்டி வரி குறைப்பு மற்றொரு போனஸாக கிடைத்திருக்கிறது. எனவே ஒட்டுமொத்த வடகிழக்கு மாநிலங்களுக்கும் இரட்டை போனஸ் கிடைத்திருக்கிறது. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

திரிபுரா மாநிலத்தின் கோமதி மாவட்டம், உதய்பூரில் திரிபுர சுந்திர கோயில் அமைந்துள்ளது. 51 சக்தி பீடங்களில் ஒன்றான இந்த கோயில் வளாகம் ரூ.52 கோடியில் புனரமைக்கப்பட்டு உள்ளது. புதுப்பிக்கப்பட்ட கோயில் வளாகத்தை பிரதமர் நரேந்திர நேற்று திறந்து வைத்தார். திரிபுர சுந்தரி கோயிலில் சிறப்பு பூஜை, வழிபாடுகளை நடத்தினார்.

## ஜிஎஸ்டி வரி குறைப்பை 8 ஆண்டுகளுக்கு முன்பே செய்திருக்கலாமே? மோடிக்கு ஸ்டாலின் கேள்வி

சென்னை: செப்.24-

ஜிஎஸ்டி வரிக்குறைப்பால் இந்தியர்கள் 2.5 லட்சம் கோடி ரூபாயைச் சேமிக்கலாம் என பிரதமர் அவர்கள் கூறியுள்ளார். 8 ஆண்டுகளுக்கு முன்பே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால், இந்தியக் குடும்பங்கள் இன்னும் பல கோடி ரூபாயை எப்போதோ சேமித்திருக்குமே? என முதல்வர் ஸ்டாலின் கேள்வியெழுப்பியுள்ளார்.



மத்திய அரசின் ஜிஎஸ்டி வரிக்குறைப்பு தொடர்பாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், ‘ ஜிஎஸ்டி வரிக்குறைப்பாலும் வருமான வரி விலக்குக்கான உச்சவரம்பை உயர்த்தியதாலும் இந்தியர்கள் 2.5 லட்சம் கோடி ரூபாயைச் சேமிக்கலாம் என பிரதமர் அவர்கள் கூறியுள்ளார். இதைத்தானே தொடக்கத்தில் இருந்தே எதிர்க்கட்சிகளான நாங்கள் வலியுறுத்தி வந்தோம்?. 8 ஆண்டுகளுக்கு முன்பே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால், இந்தியக் குடும்பங்கள் இன்னும் பல கோடி ரூபாயை எப்போதோ சேமித்திருக்குமே?.

மேலும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வரிக்குறைப்பில் சரிபாதி அளவு மாநில அரசுகளின் பங்கிலிருந்துதான் செய்யப்படுகிறது. இந்த உண்மையை ஒன்றிய அரசு மறைப்பதாலும் பாராட்ட மறுப்பதாலும் இதனைச் சுட்டிக்காட்ட வேண்டியது எனது கடமையாகிறது.

மற்றொரு புறம், ஒன்றிய பாஜக அரசு மாநிலங்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய நிதியைத் தர மறுத்து வருகிறது. இந்தித் திணிப்பை ஏற்க மறுக்கும் ஒரே காரணத்துக்காக, ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய நிதி மறுக்கப்படுகிறது. இந்த அநீதி எப்போது முடிவுக்கு வரும்?

தங்கள் உரிமைகளைப் பாதுகாத்து, தம் மக்களுக்காக முன்நிற்கும் மாநில அரசுகளைத் தண்டிப்பதன் வழியாக இந்தியா வளர்ச்சி பெற முடியாது. கூட்டாட்சிக் கருத்தியலுக்கு மதிப்பளியுங்கள், உரிய நிதியை விடுவியுங்கள், மக்களுக்கு நியாயமாகச் சேர வேண்டியதைத் தந்து அவர்களைப் பயனடைய விடுங்கள்’ எனத் தெரிவித்துள்ளார்

## ஆத்திகர்களாலும், நாத்திகர்களாலும் திமுக ஆட்சி கொண்டாடப்படுகிறது : அமைச்சர் சேகர் பாபு

சென்னை: செப்.24-

ஆத்திகர்களாலும், நாத்திகர்களாலும் திமுக ஆட்சி கொண்டாடப்படுகிறது என அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.




சென்னை, கோயம்பேடு அங்காடி நிர்வாக அலுவலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அங்காடி நிர்வாகக் குழுவிற்கென (Koyambedu Market Management Committee) புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இணையதளச் சேவையை தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், “பணிகளை விரைவுப்படுத்தும் நோக்கத்தோடு பல்வேறு துறைகள் கணினிமயமாக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் செயல்படும் கோயம்பேடு அங்காடி நிர்வாகத்திற்கென புதிதாக இணையதள சேவையை இன்றைக்கு துவக்கியுள்ளோம். இந்த இணையதளத்தின் வழியாக, 3000க்கும் மேற்பட்ட கடைகள் இந்த அமைப்பில் பராமரிப்பு கட்டணம், விலைகள் நிர்ணயம் போன்றவற்றை அறிந்து கொள்ள முடியும்.

கோயம்பேடு மார்க்கெட்டில் செப்டம்பர் மாதம் 25ஆம் தேதி தொடங்கி அக்டோபர் 5 ஆம் தேதி வரை ஆயுதபூஜை சிறப்புச் சந்தை நடைபெறும். கோயம்பேடு சந்தை பகுதியில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பிலும், மெட்ரோ ரெயில் பணிகளையும் ஆயுத பூஜை திருவிழா காலத்தில் 5 நாட்கள் நிறுத்த வியாபாரிகள் கோரிக்கை வைத்துள்ளனர், சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூன்றாவது பெருந்திட்ட வரைவுத் திட்டம் இந்தாண்டு இறுதி அல்லது 2026 தை மாதம் முதல் நாள் வெளியிடப்படும். முதல்வர் ஸ்டாலின் இந்த பணிகளை விரைவுப்படுத்த உத்தரவிட்டிருக்கிறார், அந்த வகையில் இந்த பணிகள் விரைவுப்படுத்தப்பட்டு மூன்றாவது பெருந்திட்ட வரைவுத் திட்டம் 2026 தை மாதம் வெளியிடப்படும்.

கோயம்பேடு சந்தையை மேம்படுத்த மழைநீர் கால்வாய், மெட்ரோ ரயில் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கோயம்பேடுக்கு வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதால் கழிவறைகளும் இலவசமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. கோயம்பேடு சுத்தமான அங்காடியாக மாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். கடந்த காலத்தில் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு அதிக நிதி செலவிடப்படவில்லை” என்று தெரிவித்தார்.

பின்னர், `2026 தேர்தலில் காங்கிரஸ் கட்சி தலைவர்கள் அதிகம் இடங்கள் கேட்போம்’ என்று கூறியுள்ளது தொடர்பான செய்தியாளர் கேள்விக்கு அவர், ‘இந்த இயக்கத்தின் மூலவர், உற்சவர் எல்லாமே எங்கள் முதலமைச்சர் தான். இது போன்ற சூழல்களுக்கு உண்டான தீர்வை அவர் காண்பார்’ என்றார்.

மேலும், `அண்ணாமலை, முதலமைச்சரை விமர்சிப்பது’ தொடர்பான செய்தியாளர் கேள்விக்கு பதிலளித்த அவர், ‘ இந்த ஆட்சி ஆத்திகர்களாலும், நாத்திகர்களாலும் கொண்டாடப்பட கூடிய ஆட்சியாக விளங்குகிறது. அந்த இயக்கத்தாலே ஓரங்கட்டப்பட்ட அண்ணாமலை போன்றவர்கள் இவ்வாறு பேசுவதில் எந்த ஆச்சரியமும் இல்லை’ என்று தெரிவித்தார்.



■ மதுரை திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் மறவன்குளம் ஊராட்சிக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை வட்டாட்சியர் கிளமெண்ட் சுரேஷ் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரகலா ஆகியோர் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தனர்.ஊராட்சி செயலாளர் திக்விஜயன்,மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர்.



■ மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் இளமனுர்,கார்சேரி ஆகிய ஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். முகாமில் கிழக்கு தாசில்தார் மனேஷ் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜோதிராஜ், கதிரவன்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் முத்து கிருஷ்ணன்,ஊராட்சி செயலாளர் ராஜபிரபு ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர்.முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு மனு அளித்தனர்.



■ மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கரிமேடு பகுதியில் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் மேம்பாட்டு பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு குறைகளை கேட்டறிந்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# 32.60 லட்சம் பள்ளி மாணவர்களுக்கான 2ம் பருவ பாட நூல்கள் தயார்

சென்னை, செப்.24-

அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 7ம் வகுப்பு வரை பயிலும் 32.60 லட்சம் மாணவர்களுக்கு 2ம் பருவத்துக்கான பாட நூல்கள் முதல் நாளிலேயே வழங்கும் வகையில் தயார் நிலையில் இருப்பதாக பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன் தெரிவித்தார்.

தமிழக பள்ளிக் கல்வித் துறையின் கீழ் 44,000க்கும் அதிகமான அரசு மற்றும் நிதியுதவி பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 1 முதல் 12ம் வகுப்பு வரை சுமார் 70 லட்சம் மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். இவர்களுக்கான பாட நூல்கள் அச்சிடும் பணியை தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மேற்கொண்டு வருகிறது. அரசு மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகளின் மாணவர்களுக்கு இலவசமாகவும், தனியார் பள்ளிகளுக்கு குறைந்த விலையிலும் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

இதற்கிடையே, பள்ளிக் கல்வியில் 1 முதல் 7ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முப்பருவக் கல்வி முறையும், 8 முதல் 12ம் ஆண்டு வரையான மாணவர் களுக்கு முழு ஆண்டு கல்வியும் நடைமுறையில் உள்ளது. அதன்படி 1 முதல் 7ம் வகுப்பு வரை 3 பருவங்களுக்கும் தனித்தனியாக பாடப் புத்தகங்கள் வழங்கி தேர்வுகள் நடத்தப்படுகின்றன.






தற்போது பள்ளி மாணவர்களுக்கு காலாண்டு மற்றும் முதல் பருவத் தேர்வுகள் நடைபெற்று வருகின்றன. இந்த தேர்வுகள் செப்டம்பர் 26ம் தேதியுடன் நிறைவு பெறவுள்ளன. இதையடுத்து அனைத்து வகுப்புகளுக்கும் செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 5ம் தேதி வரை காலாண்டு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுமுறை முடிந்து பள்ளிகள் மீண்டும் அக்டோபர் 6ம் தேதி திறக்கப்படும். அப்போது 1 முதல் 7ம் வகுப்பு வரையான மாணவர் களுக்கு 2ம் பருவத்துக்கான வகுப்புகள் தொடங்கும். தற்போது மாணவர்களுக்கான 2ம் பருவப் பாட நூல்கள் அனைத்து மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை கல்யாணம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள கிடங்கில் மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கான வைக்கப்பட்டுள்ள பாடப் புத்தகங்களை பள்ளிக் கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது, “நடப்பு கல்வியாண்டில் 2ம் பருவம் அக்டோபர் 6ல் தொடங்கவுள்ளது. பள்ளிகள் திறக்கப்பட்ட முதல் நாளிலேயே 7ம் வகுப்பு வரை பயிலும் 32 லட்சத்து 60,960 மாணவர்களுக்கு வழங்குவதற்காக விலையில்லா பாடப் புத்தகங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. பாட நூல்களை விநியோகிப்பதில் எந்த தொய்வும் இருக்கக் கூடாது என்பதற்காக தொடர் ஆய்வுகள் மூலம் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன” என்று கண்ணப்பன் கூறியுள்ளார்.





# சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரியில், 2025 ஆம் ஆண்டின் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது

காரைக்குடி, செப்.24-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரியில், 2025 ஆம் ஆண்டின் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி 22.09.2025 அன்று நடைபெற்றது. கல்லூரியின் தாளாளர் முனைவர் சேது குமணன், அவர்களின் வழிகாட்டுதலின் படி இந்நிகழ்ச்சியில் காரைக்குடி உலகநாதபுரம், காவல் நிலையத்தின் சிறப்பு துணை ஆய்வாளர் (SSI) திரு. மாணிக்கம் அவர்கள் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு விழிப்புணர்வு உரையாற்றினார்.

தலைமை விருந்தினர் சிறப்பு துணை ஆய்வாளர் திரு. மாணிக்கம் அவர்கள் உரையாற்றுகையில்:

“இன்றைய இளைஞர்கள் நாட்டின் எதிர்காலம். போதைப் பொருள் மனிதனின் ஆரோக்கியத்தையும் அறிவையும் சீரழிக்கிறது. போதை பழக்கம் கல்வியில் பின்தங்க வைக்கிறது, குடும்ப உறவுகளை சிதைக்கிறது. ஒருமுறை அடிமையானால் விடுபட கடினம். அதனால் ‘தவிர்ப்பதே தீர்வு’ என்பது முக்கியம். மாணவர்கள் நல்ல நண்பர்களைத் தேர்வு செய்ய வேண்டும். உடல், மன, சமூக நலனுக்காக போதைப்பொருளை முற்றிலும் தவிர்த்து, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ வேண்டும். மேலும், உடற்பயிற்சி, வாசிப்பு, கலாச்சார மற்றும் விளையாட்டு நடவடிக்கைகள் போன்ற நல்ல பழக்கங்களில் ஈடுபட வேண்டும். சமூகத்தில் விழிப்புணர்வை பரப்புவதிலும் மாணவர்கள் முன்வர வேண்டும். நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு போதை இல்லா சமுதாயமே அடித்தளம்.

பெண் பிள்ளைகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் இருந்தால் மட்டுமே போதைப்பொருள் வேரோடு ஒழிக்கப்படும்.” என்று வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியில் முதல்வர் முனைவர் முரளிக் கிருஷ்ணசாமி, செயலாளர் திருமதி கோகிலம் குமணன், சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் கண்மணி சுப்ரமணியன், பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.

## விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், வருகின்ற 26.9.2025 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, செப்.24-

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வருகின்ற 26.9.2025 (வெள்ளிக்கிழமை) அன்று முற்பகல் 10.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மாவட்டத்தின் அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள விவசாயப் பெருமக்கள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

தேனி, செப்.24-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ஃபோர்க்லிப்ட் ஆப்ரேட்டர் (Forklift Operator) பயிற்சி வழங்கப்படவுள்ளது.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யும் நிறுவனங்களில் ஃபோர்க்லிப்ட் ஆப்ரேட்டர்களின் பங்கு முக்கியமானதாகும். குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் இருத்தல் வேண்டும். 18 முதல் 35 வயது வரை உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்தை சேர்ந்தவர்கள் www.tahdco.com என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

இப்பயிற்சியினை முழுமையாக முடிக்கும் இளைஞர்களுக்கு பயிற்சி சான்றிதழ் மற்றும் வேலை வாய்ப்பிற்கு வழிவகை செய்யப்படும். இப்பயிற்சிக்கான கால அளவு ஒரு மாதம் ஆகும். பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு தங்கும்விடுதி மற்றும் உணவு உட்பட செலவினம் தாட்கோ மூலமாக வழங்கப்படும்.

மேலும், கூடுதல் விவரங்கள் அறிய மாவட்ட மேலாளர், தாட்கோ, அறை எண்.73, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தேனி என்ற முகவரிக்கு நேரில் அல்லது 9445029480 என்ற கைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தெரிவித்துள்ளார்.

## கொடியேற்றத்துக்கு தர்பை தயார்: திருப்பதி பிரம்மோற்சவம் இன்று தொடக்கம்

திருமலை, செப்.24-

திருப்பதி ஏழுமலையான் கோயிலின் வருடாந்திர பிரம்மோற்சவம் இன்று மாலை கொடியேற்றத்துடன் தொடங்க உள்ளது. அக்டோபர் 2ம் தேதி வரை நடைபெற உள்ள இந்த விழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்கின்றனர்.

இன்று மாலை கோயிலில் உள்ள தங்க கொடி மரத்தில் கருடன் சின்னம் பொறித்த கொடி ஏற்றப்படுகிறது. இதற்காக கொடி மரத்தில் சுற்றிலும் அமைக்கப்பட உள்ள புனித தர்பை புற்களையும் பிரம்மோற்சவ கொடியை கட்டுவதற்கான புனித கயிற்றையும் நேற்று தேவஸ்தான ஊழியர்கள் ஊர்வலமாக கொண்டு வந்து அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் அவற்றுக்கு பூஜை கள் செய்யப்பட்டு, கோயிலில் உள்ள ரங்கநாயக மண்டபத்தில் ஆதிசேஷனாக கருதப்படும் பெரிய சேஷ வாகனத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

பிரம்மோற்சவம் இன்று தொடங்குவதை முன்னிட்டு, நேற்று மாலை, வைகானச ஆகம விதிகளின்படி ஏழுமலையான் கோயிலில் அங்குரார்ப்பண நிகழ்ச்சி நடைபெற்றது.

இதையடுத்து ஏழுமலையானின் படைத் தளபதி என்று அழைக்கப்படும் விஸ்வக்சேனர், பிரம்மோற்சவ ஏற்பாடுகளை ஆய்வு செய்யும் ஐதீகம் அடிப்படையில் ஆயுதங்களை ஏந்தி மாட வீதிகளில் உலா வருவார்.



## திருப்புவனத்தில் சுத்திகரிக்கப்பட்ட புதிய குடிநீர் நிலையத்தை பேரூராட்சி மன்றத்தலைவர் த.சேங்கைமாறன் திறந்து வைத்தார்

திருப்புவனம், செப்.24-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பேரூராட்சி உச்சிமாகாளி அம்மன் கோவில் தெருவில் பேரூராட்சி பொதுநிதியில் இருந்து 11.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைக்கப்பட்டது.

இந்நிலையில் திருப்புவனம் பேரூராட்சி மன்றத் தலைவரும் சிவகங்கை மாவட்ட திமுக துணைச் செயலாளருமான த. சேங்கைமாறன் கலந்து கொண்டு திறந்து வைத்தார்... இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்றத் தலைவர் ரஹமதுல்லாகான், மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் அண்ணாமலை , பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் செல்விரவி , கண்ணன், வேல்பாண்டி, பாலகிருஷ்ணன் , சித்ரா ஆறுமுகம், ராமலெட்சுமி பாலகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்...




### இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்கை

## மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ர ன்ஜீத் சிங் காலோன் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக்கிடங்கு வளாகத்தில் உள்ள இராமநா தபுரம், முதுகுளத்தூர், திருவாடனை, பரமக்குடி (தனி) ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள அறையினை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்களுடன் பாதுகாப்பு தன்மை குறித்து பார்வையிட்டார். முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வேளாண்மை வணிக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.செ. ஹபிபூர் ரஹ்மான் அவர்கள், வட்டாட்சியர்கள் (தேர்தல்) திரு.ஸ்ரீதரன் அவர்கள், திரு.காளீஸ்வரன் அவர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# சிவகங்கை மாவட்டத்தில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற அகல் விளக்கு நிகழ்ச்சி மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கான நடைபெற்ற ஆய்வு கூட்டம் ஆகிய நிகழ்வுகளில் அமைச்சர்கள் கேஆர்.பெரியகருப்பன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்

சிவகங்கை, செப்.24-

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் மற்றும் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் ஆகியோர் சிவகங்கை மாவட்டத்தில், பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூட்ட அரங்கில் நடைபெற்ற அகழ் விளக்கு நிகழ்ச்சி மற்றும் சிவகங்கை மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாக கூட்டரங்கில் நடைபெற்ற தலைமை ஆசிரியர்களுக்கான ஆய்வு கூட்டம் ஆகிய நிகழ்வுகளில், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் பங்கேற்று சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி மாணவ, மாணவியர்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் கல்வி முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் கல்வித்தரம், மாணவர் நலன், மகிழ்ச்சியான கற்றல் சூழல், சுற்றுச்சூழல், ஆசிரியர்மாணவர் நல்லுறவு உள்ளிட்ட பல்வேறு நிலைகளில் தனிக்கவனம் செலுத்தி வருகின்றார்கள்.

பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் தொடர் ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு மாணவ, மாணவியர்களின் கற்றல் திறன் மேம்படும் வகையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டார கல்வி அலுவலர்கள், பள்ளி மற்றும் மாணவர்களின் கல்வித்தரம் குறித்து தொடர் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். பல்வேறு விதமான சூழ்நிலைகள் மற்றும் மனநிலைகளில் வரும் மாணவ, மாணவியர்களுக்கு ஏற்றவாறு அவர்களை வழிநடத்தி சிறந்த பண்புடைய மாணவர்களாக உருவாக்க வேண்டிய கடமை ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு உள்ளது. சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு அளவில் சிறந்த முன்னேற்றம் அடைந்த மாவட்டமாக விளங்க அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும்.

மேலும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் தொடக்க நடுநிலை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான அடைவுத் தேர்வு (SLAS) சார்ந்த ஆய்வு கூட்டம் இன்றைய தினம் நடத்தப்பட்டுள்ளது. இதில் சிவகங்கை மாவட்டத்தில் 2024-25ஆம் கல்வியாண்டில் அனைத்து வகை அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 3, 5, 8ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மாநில அளவிலான அடைவு ஆய்வு (SLAS) 04.02.2025, 05.02.2025 மற்றும் 06.02.2025 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

இத்தேர்வுக்கு முன்னேற்பாடாக மொழிப்பாடங்களில் மாணவர்களின் வாசிப்பு மற்றும் புரிந்து




கொள்ளும் திறனை மதிப்பிடும் வகையிலும், கற்றல் விளைவுகளின் அடிப்படையிலும் மாதிரி வினாக்கள் மூலம் பயிற்சி வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிவகங்கை மாவட்டத்தில் மாநில அளவிலான அடைவுத் தேர்வினை (SLAS) 3ஆம் வகுப்பில் 1085 பள்ளிகளில் உள்ள 7458 மாணவர்களுக்கும். 5ஆம் வகுப்பில் 1089 பள்ளிகளில் உள்ள 8207 மாணவர்களுக்கும் மற்றும் 8ஆம் வகுப்பில் 500 பள்ளிகளில் உள்ள 8223 மாணவர்களுக்கும் அடைவு ஆய்வு நடத்தப்பட்டது. மொத்தம் சிவகங்கை மாவட்டத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 3, 5, 8ஆம் வகுப்பு மாணவர்களின் மொத்த அடைவுத் திறன் 60.7 சதவீதத்துடன் மாநில அளவில் 10ஆம் இடம் பெற்றுள்ளது.

இந்த ஆண்டு SLAS-™ 10ஆம் இடம் பெற்ற சிவகங்கை மாவட்டத்தினை அடுத்து வருகின்ற SLASல் முதல் 5 இடங்களுக்குள் வரவேண்டும் என பள்ளிக்கல் வித்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணை இயக்குநர் மா. இராமகிருஷ்ணன் அவர்கள் சிறப்புரையாற்றி அனைத்து நிலை தலைமையாசிரியர்களுக்கும் வழிகாட்டுதல்கள் வழங்கினார். சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்கள் கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் சிறப்புரையாற்றி எதிர்வரும் காலங்களில் மாணவர்களின் அடைவுத் திறனை மேம்படுத்த வழிகாட்டுதல்கள் வழங்கினார். பின்னர் சிறப்புரையாற்றிய மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் திரு. கோ.முருகன் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் மாணவர்களின் கல்வி அடைவினை மேம்படுத்த தேவையான செயல்திட்டத்தினை அறிக்கையாக சமர்ப்பித்தார்.

இந்நிகழ்வின் போது, அக்கூட்டரங்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ரூ.8.70 இலட்சம் மதிப்பிலான LED. திரை அமைப்பினை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுடன் இணைந்து திறந்து வைத்தார்.

முன்னதாக, 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவிகள் இணைய தளத்தினை பாதுகாப்பாக கையாள்வது குறித்து வழிகாட்டும் விதமாக சிவகங்கை மாவட்டத்திலுள்ள 138 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியைகளுக்கு பயிற்சி வழங்கும் வகையில் ‘அகல்விளக்கு’ என்ற திட்டம் குறித்து பயிற்சி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் வழங்கப்பட்டது.

இப்பயிற்சியில் ‘அகல்விளக்கு’ என்ற திட்டம் குறித்தும் இணையதள பயன்பாடு குறித்தும் உறுதிமொழி எடுக்கப் பட்டது. இதில், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி. ஆ.தமிழரசி ரவிக்குமார் அவர்கள், மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணை இயக்குநர் திரு. மா.இராமகிருஷ்ணன் அவர்கள் மற்றும் சிவகங்கை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் திரு.கோ.முருகன், விரிவுரையாளர்கள் உடனிருந்தனர்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) திரு. சே.மாரிமுத்து, மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் திரு. கோ.முருகன், மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கநிலை) திரு.செந்தில்குமார் திரு.ராஜேந்திரன் மற்றும் மாவட்டக்கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) திரு.வடிவேல் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி உதவித் திட்ட அலுவலர் திரு. அ.பீட்டர் லெமாயு உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# சென்னையில் மேலும் இரு புதிய கிளைகளை தங்கமயில் ஜுவல்லரி நிறுவனம் திறக்கப்பட்டுள்ளது

சென்னை, செப்.24-

சென்னையில் மேலும் இரு புதிய கிளை களை தங்கமயில் ஜுவல்லரி நிறுவனம் திறக்கப்பட்டுள்ளது

இது குறித்து நிறுவனம் வெளி யிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்க ப்பட்டுள்ளது,

மாமதுரையை தலைமை யிடமாகக் கொண்ட தங்கமயில் நிறுவனம் கடந்த 33 ஆண்டுகளாக தங்க நகை விற்பனையில் தனக்கென தனியொரு அடையாளத்தை பதித்துள்ளது. தற்போது 35 லட்சத்துக்கும் மேற்பட்ட வாடிக்கையாளாகளுடன் தமிழகம் முழுவதும் 64 கிளைகளைக் கொண்டு நிறுவனம் இயங்கி வருகிறது.

இந்தச் சூழலில், சென்னை ஆவடியில் தனது 65வது கிளையையும், கீழ்கட்டளையில் 66வது கிளையையும் நிறுவனம் திறக்கப்பட்டது,

இந்த திறப்பு விழாவின் முக்கிய அம்சமாக, தங்கமயில் ஜுவல்லரி காட்சியகத்துக்குள்ளேயே தனது பிரத்யேக பிரைடல் ஸ்டோரை அறிமுகப்படுத்தி அதில் ‘தங்க மாங்கல்யம்’ என்னும் தனித்துவமான திருமண நகை கலெக்ஷன் களையும் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது, சிறப்பு விழாவுக்கு வருகை தந்த அனைவரையும் நிறுவனத்தினர் பலராம கோவிந்த தாஸ் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர், பா.ரமேஷ் இணை நிர்வாக இயக்குனர், என். பி.குமார் இணை நிர்வாக இயக்குனர் வரவேற்றனர்,




■ காஞ்சிபுரம் திருபெரும்புதூர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க தாம்பரம் காவல் ஆணையரகத்தின் திருமுடிவாக்கம் காவல் நிலையத்தை புதிதாக உதயமான காவல் நிலையத்தை மத்திய ஒன்றிய செயலாளர் திருமுடிவாக்கம் தலைவர் ஏ.மணி தலைமையில் திருபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை,தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் அபின் தினேஷ் மோதக், இ.கா.ப.,ராஜேஸ்வரி போக்குவரத்து ஆணையர்,மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன்,இ.ஆ.ப.மற்றும் ஒன்றிய செயலாளர் காஞ்சிபுரம் பெருந்தலைவர் படப்பை ஆ.மனோகரன் ஆகியோர் முன்னிலையில் குறு சிறு நடுத்தர தொழில் துறை அமைச்சர் தாமோ.அன்பரசன் துவங்கி வைத்தார்.உடன் குன்றத்தூர் ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், மாவட்ட மாவட்ட கவுன்சிலர் அரி,ஒன்றிய கவுன்சிலர் லட்சாவதி கருணாகரன், பழந் தாண்டலம் தலைவர் கோதை நாயகி வரதன், துணைத் தலைவர் தியாகராஜன், திருமுடிவாக்கத் துணைத் தலைவர் வைத்தியலிங்கம், நந்தம்பாக்கம் தலைவர் முத்துராமன், நடுவீரப்பட்டு தலைவர் சுப்பிரமணி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவரையும் துணை ஆணையர் சுந்தரம்,ஆய்வாளர் முத்துக்குமார்,உதவி ஆய்வாளர் செந்தில் உள்ளிட்டோர் வரவேற்று மகிழ்ந்தனர்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு வீடியோ ஒளிப்பதிவு மற்றும் வடிவமைப்பு (Certification in videogrophy and video Editing) பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியினை பெற பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களாகவும், 18 வயது முதல் 30 வயதிற்குட்பட்டவர்களாகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சார்ந்தவர்கள் www.tahdco.com என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

இப்பயிற்சிக்கான கால அளவு மூன்று மாதங்கள் ஆகும். இப்பயிற்சியினை முழுமையாக முடிக்கும் இளைஞர்களுக்கு பயிற்சி சான்றிதழ் மற்றும் வேலை வாய்ப்பிற்கு வழிவகை செய்யப்படும். தங்கும் விடுதி மற்றும் உணவு உட்பட செலவினம் தாட்கோ மூலமாக வழங்கப்படும்.

மேலும், கூடுதல் விவரங்கள் அறிய மாவட்ட மேலாளர், தாட்கோ, அறை எண்.73, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தேனி என்ற முகவரிக்கு நேரில் அல்லது 9445029480 என்ற தொலைப்பேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# “காய்த்த மரம்தான் கல்லடி படும்” - விஜய் விமர்சனத்துக்கு அமைச்சர் கே.என்.நேரு பதில்

திருச்சி, செப்.24-

தமிழக நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று திருச்சி யில் செய்தியாளர்களிடம் கூறியது: தவெக தலைவர் விஜய், 2 அமைச்சர்கள் இருந்தும் திருச்சி மாவட்டம் வளரவில்லை. திருவாரூர் முன்னேறவில்லை என குற்றம் சாட்டினார். ஆனால், இந்த நான்கரை ஆண்டுகால திமுக ஆட்சியில், ரூ.35,000 கோடி



மதிப்பிலான திட்டங்கள் திருச்சி மாவட்டத்துக்கு வந்ததாக முந்தைய ஆட்சியர் மா.பிரதீப்குமார் ஏற்கெனவே தெரிவித்துள்ளார். எனவே, விஜய் பேசியதில் உண்மை இல்லை.

தமிழக முதல்வர். திருச்சி மாவட்டத்துக்கு மட்டுமின்றி, டெல்டா மாவட்டங்களுக்கும் நிறைய செய்துள்ளார். இதை மக்களிடம் சொல்வோம். திருவாரூருக்கு மட்டும் ரூ.2,000 கோடி திட்டங்களை முதல்வர் தந்துள்ளார். மற்றவர்கள் சொல்வதற்கு நான் பதில் கூற முடியாது. தமிழகத்தில் எத்தனை கூட்டணிகள், கட்சிகள் உருவானாலும், 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணி மகத்தான வெற்றி பெற்று, திமுக 7வது முறையாக ஆட்சியில் அமரும். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து 2வது முறையாக முதல்வராக பொறுப்பேற்பார்.

வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஏராளமான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மணப் பாறையில் ஜாபில் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் ஆலை தொடங்கப்பட உள்ளது. இதில் 5,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். திருச்சியின் முகமே வேறாக மாறிவிடும்‘ என்றார். தொடர்ந்து, ’புதிய கட்சி தொடங்கு பவர்கள் முதல் பல்வேறு கட்சியினரும் திமுகவை விமர்சிப்பது ஏன்’ என்ற கேள்விக்கு, மொட்டை மரம் கல்லடி படாது. காய்த்த மரம்தான் கல்லடி படும். திமுக ஒரு காய்த்த மரம் என்றார்.




# தேவகோட்டையில் சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வு பேரணி

தேவகோட்டை, செப்.24-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தலைமை அஞ்சலகம் சார்பில் சுற்றுப்புறச் சூழலை பேணிப் பாதுகாத்திடும் வகையில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது...

காரைக்குடி அஞ்சலக உபகோட்ட ஆய்வாளர் ரித்தீஷ் சவுகான்,தேவகோட்டை தலைமை அஞ்சல் அதிகாரி செல்வராஜ் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த பேரணியானது அஞ்சல் அலுவலகத்திலிருந்து திருப்பத்தூர் சாலை வழியாக தியாகிகள் பூங்கா வரையில் பேரணி நடைபெற்றது..

இதில் விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியபடி சென்றனர்.மேலும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு பிரசுரங்கள் வழங்கப்பட்டது. இந்த பேரணியில் காரைக்குடி உபகோட்ட அஞ்சலக உதவியாளர் ரமேஷ்,தேவகோட்டை அஞ்சலக உப கோட்ட நீல் ஓவர்சியர் உமா மகேஸ்வரி, அஞ்சலக அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

# தனிக்கட்சி ஆரம்பிக்கப் போகிறேனா? அண்ணாமலை சொன்ன ஷாக் பதில்

சென்னை, செப்.24-

தனிக்கட்சி ஆரம்பிப்பது குறித்த கேள்விக்கு பதிலளித்த தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை, “தனிக்கட்சி ஆரம்பிக் கும்போது சொல்கிறேன்” என்று தெரிவித்தார்.

பாஜக நிர்வாகியும், நடிகருமான சரத்குமாரின் மாமியாரும், நடிகை ராதிகாவின் தாயாருமான கீதா ராதாவின் மறைவையடுத்து சென்னையில் உள்ள அவர்களின் இல்லத்துக்கு நேரில் சென்று தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை ஆறுதல் கூறினார். இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அண்ணாமலை, ‘டிடிவி தினகரன் 2024 முதல் எங்கள் கூட்டணியில் இருந்தார். அவர் சமீபத்தில் கூட்டணியை விட்டு வெளியேறுவதாக அறிவித்தார். அவர் ஒரு மாத காலம் சுற்றுப்பயணத்தில் இருந்ததால், இப்போது சென்னை வந்ததும் அவரை நேரில் சந்தித்தேன்.

இந்தச் சந்திப்பின்போது, திமுகவை வீழ்த்த தேசிய ஜனநாயக கூட்டணியில் இணையவேண்டும் என அவரிடம் மீண்டும் வலியுறுத்தினேன். எனவே அவர் நவம்பரில் நல்ல



முடிவை எடுப்பார் என்று நம்புகிறேன். இதனையடுத்து ஓ.பன்னீர்செல்வத்தையும் நான் சந்திக்கவுள்ளேன்.

முதல்வரின் வெளிநாட்டு பயணம் குறித்து விஜய் பேசிய கருத்தை வரவேற்கிறேன். ஏற்கெனவே, திமுக குடும்பத்தின் ஆடிட்டரை துபாய்க்கு செல்லும்போது முதல்வர் ஸ்டாலின் அழைத்துச் சென்றார். அதன் அடிப்படையில்தான் இப்போது விஜய் குற்றம்சாட்டுகிறார். தங்கள் மேல் குற்றம் இல்லையென்றால் முதல்வர் தரப்பு வெளிநாட்டு பயணங்கள் குறித்து வெள்ளை அறிக்கை கொடுக்கட்டும்.

‘மேக் இன் இந்தியா’ திட்டத்துக்காகவே வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் பல்வேறு முதலீடுகளை செய்கின்றன. இதனை மறைத்து வெளிநாடுகளில் சென்று முதல்வர் ஸ்டாலின் போட்டோ எடுக்கிறார். கருணாநிதியை துரோகி, மோசக்காரன் என சபாநாயகர் அப்பாவு கடந்த காலங்களில் பேசினார், இப்போது அவர் திமுகவில் உள்ளார்.

தமிழ்நாட்டில் திமுகவுக்கு எதிராக யாரும் பேசினால் அவரை பாஜகவின் பி டீம் என்று திமுக சொல்கிறது. ரஜினியை நான் அடிக்கடி சந்தித்து வருகிறேன், நட்பு அடிப்படையிலேயே அவரை சந்திக்கிறேன். எனவே அவரை அரசியலுக்குள் இழுக்க வேண்டாம். முதலில் ஒவ்வொரு மாநிலத்திலும் பல்வேறு வரிகள் இருந்தன. இதனால் முதன் முறையாக ஜிஎஸ்டியை கொண்டுவந்தபோது 4 அடுக்கு தேவைப்பட்டது. இப்போது அதனை இரு அடுக்குகளாக குறைத்துள்ளோம்” என்றார்.

நீங்கள் தனிக்கட்சி ஆரம்பிக்க உள்ளீர்களா என செய்தியாளர்கள் கேட்டபோது, “ தனிக்கட்சி ஆரம்பிக்கும்போது சொல்கிறேன்” என்று அண்ணாமலை பதிலளித்துள்ளார்.

மாலை தந்தி

புதன்கிழமை 24.9.2025



■ அமைச்சர் மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட பகுதியில் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட புகைப்படம்.



■ மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களை விமான நிலையத்தில் அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் புத்தகம் மற்றும் பொன்னாடை கொடுத்து வரவேற்ற புகைப்படம்

# கல்லலில் நூல் வெளியீட்டு விழா

சிவகங்கை, செப்.24-

சிவகங்கை மாவட்ட எழுத்தாளர் மகாபிரபு மற்றும் 25 எழுத்தாளர்கள் இணைந்து எழுதியுள்ள "சவாலே சமாளி" நூல் வெளியீட்டு விழா வரும் செப்டம்பர் 28ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லல் விஜெயம் அரங்கத்தில் நடைபெறுகிறது.




நுண்கதை, சிறுகதை, கவிதை ,கட்டுரை நூல்கள் எழுதியுள்ள மகா பிரபுவிற்கு இது 11வது நூலாகும். இவர் தனது நான்கு தொகுப்புக் கட்டுரை நூல்கள் மூலம் 40 பெண்கள் உட்பட 87 பேரை தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்துள்ளார். இதில் கல்லூரி மாணவ மாணவிகளும் அடக்கம்.

இந்த நூலில் ஊடகம் என்ற தலைப்பில் கரு. சந்திரகுமார், தூய்மைப் பணியாளர்கள் என்ற தலைப்பில் ராவணன், நேர்மை என்ற தலைப்பில் புனிதா முத்துகிருஷ்ணன், பொழுதுபோக்கு என்ற தலைப்பில் விஷாலினி, புதுமை என்ற தலைப்பில் ஜோதிமணி, கற்பனை என்ற தலைப்பில் சந்தன மேரி, மனித நேயம் என்ற தலைப்பில் தென்றல் மணியன், சகோதரத்துவம் என்ற தலைப்பில் கற்பகவல்லி, பேரக்குழந்தைகள் என்ற தலைப்பில் நித்யா, திருமணம் என்ற தலைப்பில் பாண்டியம்மாள், உழைப்பு என்ற தலைப்பில் தெய்வானை, திறமை என்ற தலைப்பில் இன்பவள்ளி, தொழில் என்ற தலைப்பில் ஜான் பிரகாஷ், ஒற்றுமை என்ற தலைப்பில் நதியா, கவனம் என்ற தலைப்பில் மருதநாயகம், உரிமை என்ற தலைப்பில் கமல் ராஜன், அதிர்ஷ்டம் என்ற தலைப்பில் சத்திய ராணி, பாராட்டு என்ற தலைப்பில் வெங்கடேசன், கடமை என்ற தலைப்பில் மேகலா மாரீஸ், அன்பு என்ற தலைப்பில் சோபனா, உடன்பிறப்பு என்ற தலைப்பில் சுபலெட்சுமி, உதவி என்ற தலைப்பில் வினிதா, காப்பீடு என்ற தலைப்பில் ரவிச்சந்திரன், காதல் என்ற தலைப்பில் பவித்ரா, சுற்றுச்சூழல் தலைப்பில் உமா ஆகியோர் தங்கள் படைப்புகளை கட்டுரையாக அரங்கேற்றியுள்ளனர். இவர்களுடன் நூலின் தொகுப்பாசிரியரான மகா பிரபு நூலின் தலைப்பான சவாலே சமாளி என்ற பெயரில் சிறப்பு கட்டுரை எழுதியுள்ளார்.

காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரி தமிழ் உயராய்வு மைய மேனாள் தலைவர் முனைவர் முருகேசன், உலகத் திருக்குறள் கூட்டமைப்பு மாநில துணைத் தலைவர் புலவர் மாமணி மெய்யாண்டவர், சிவகங்கை வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர் புலவர் காளிராசா, கல்லல் வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொ) சங்கீதா, கல்லல் சாந்தி ராணி பள்ளி முதல்வர் அருட் சகோதரி சுதா, காரைக்குடி முத்து டான்ஸ் அகாடமி நிறுவனர் முத்துமாரி இளஞ் செழியன், முதுகலை ஆசிரியர் செந்தில்குமார், கவிஞர் தமிழ்க்கனல், கவிஞர் கலையரசன், தமிழ் ஆர்வலர் லெனின் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

விழாவில் அனைவரும் கலந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு 9944089151 என்ற எண்ணுக்கு எழுத்தாளர் மகா பிரபுவை தொடர்பு கொள்ளலாம்.

## பழனியில் புகையிலை விற்பனை செய்த நபரை பிடிக்கச் சென்ற



திண்டுக்கல், செப்.24-

திண்டுக்கல் மாவட்டம் பழனியை அடுத்துள்ள ஜவகர் நகர் பகுதியில் ராஜ வடிவேல் என்பவர் மளிகைக்கடை நடத்தி வருகிறார். அரசு தொடக்கப்பள்ளி அருகே உள்ள மளிகைகடையில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக உணவு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தொடர் புகார் கிடைத்துள்ளது. இதைஅடுத்து வட்டார உணவு பாதுகாப்புத் துறை அதிகாரியான ஜஸ்டின் அமல்ராஜ் மற்றும் அவருக்கு உதவியாக சென்ற கருப்புசாமி ஆகியோர் சோதனை செய்வதற்காக மளிகைக் கடைக்கு சென்றுள்ளார். அப்போது மளிகைக் கடையில் சோதனை செய்தனர். அப்போது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த குட்கா பொருட்களை பறிமுதல் செய்ய முயன்றபோது, கடையின் உரிமையாளர் ராஜ வடிவில் மற்றும் அவரது மனைவி ஆகிய இருவரும் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரியை காயப்படுத்தியுள்ளர். உணவு பாதுகாப்பு அதிகாரி ஜெபஸ்டின் அமல்ராஜ் மற்றும் அவரது நண்பர் மீதும் கடைக்காரர் ராஜவடிவேல் கடுமையாக தாக்கிவிட்டு கொலை மிரட்டல் விடுத்துள்ளார். உடனடியாக பழனி நகர் காவல் துறையினருக்கு உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தகவல் கொடுத்ததை அடுத்து ராஜவடிவேல் தப்பி ஓடினார். இந்த சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்த பழனி நகர காவல் நிலைய போலீசார் தப்பி ஓடிய ராஜவேலை காவல்துறையினர் வளத்தைப் பிடித்து காவல் நிலையம் அழைத்து வந்து ராஜவடிவேல் மளிகைக் கடைக்கு சீல் வைத்தனர். பின்பு அவர் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டனர்



# சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மாணவர்கள் மாநில அளவிலான தடகள போட்டியில் பங்கேற்பு

காரைக்குடி, செப்.24-

சிவகங்கை மாவட்டம் கடந்த செப்டம்பர் மாதம் 06.09.2025 மற்றும் 07.09.2025 அன்று அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரியில் சிவகங்கை மாவட்டளவில் இளையோர்களுக்கான தடகள போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டிகளில் எமது கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பல பரிசுகளை வென்றனர் அதில் சிறப்பாக விளையாடிய ஐந்து மாணவர்கள் மாநில அளவில் பங்கேற்க தேர்வாகியுள்ளார். தமிழ்நாடு உடற்கல்வி பல்கலைக்கழகத்தில் மாநிலளவில் இளையோர்களுக்கான தடகள போட்டிகள் கடந்த 19.09.2025 முதல் 21.09.2025 வரை நடைபெற்றது. இப்போட்டிகளில் நமது கல்லூரி மாணவ மாணவிகள் செல்வி. சாருலதா, செல்வி. ஹரிணி பிரியா (மூன்றாம் ஆண்டு) செல்வி சந்தியா தேவி மற்றும் அஜய் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் பங்கேற்றனர். தடகள போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களைக் கல்லூரியின் தாளாளர் முனைவர் சேது குமணன், முதல்வர் முனைவர் முரளிக் கிருஷ்ணசாமி, கல்லூரியின் செயலாளர் கோகிலம் குமணன் மற்றும் சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் கண்மணி சுப்ரமணியன், பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லா பணியாளர்கள் வாழ்த்துகளைக் கூறினர்.

# சென்னையை சேர்ந்த தாய் மகள் இருவரும் இந்திய அழகி போட்டியில் கலந்து கொண்டு மிஸஸ் இந்தியா 2025 ஆக தேர்வு செய்யப்பட்டுள்ளார்

சென்னை, செப்.24-




சென்னை ஈ.சி.ஆர். உத்தண்டியை சேர்ந்தவர் ஷோபானா. இவர் செம்மஞ்சேரியில் உள்ள அதீனா குளோபல் ஸ்கூல் பணியாற்றி வருகின்றனர். இவரது மகள் மெர்சி லிண்டா. இவர் 9ம் வகுப்பு படித்து வருகின்றார்.

இந்தநிலையில் ஷோபாவிற்கு திருமண பின்னரும் அழகி போட்டியில் கலந்து கொள்ள்வேண்டும் என்ற ஆர்வத்தை தொடர்ந்து, முதல் முதலில் கடந்த ஜனவரி மாதம் தனது மகளுடன் மிஸஸ் சென்னை போட்டியில் கலந்து கொண்டார். அதில் மிஸஸ் சென்னையாக ஷோபானா தேர்வு செய்யப்பட்டார், தொடர்ந்து ஜூலை மாதம் நடந்த மிஸஸ் தமிழ்நாடு போட்டியிலும் தாய் மகள் இருவர் வெற்றி பெற்றார்.

அதனை தொடர்ந்து செப்டம்பர் 19ம் தேதி டெல்லியில் நடந்த மிஸஸ் இந்தியா 2025 போட்டியில் ஷோபானா, தனது மகள் மெர்சி லிண்டாவுடன் பங்கேற்றார். இதில் இந்தியா முழுவதும் இருந்து 60க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டர். இதில் ஷோபானா பிரைட் ஆப் மிஸஸ் இந்தியா 2025 பட்டத்தை வென்றார். அவரது மகள் மெர்சி லிண்டா தென்னிந்தியா மிஸ் டீன் விருதினை பெற்று அசத்தினார். தாய் மகள் இருவரும் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்று அசத்தி உள்ளனர்.

தொடர்ந்து இவர், அமெரிக்காவில் நடக்கும் மிஸஸ் யுனிவர்ஸ் அழகிப் போட்டியில் இந்தியா சார்பில் இருவரும் கலந்து கொள்ள இருப்பதாகவும் தெரிவித்தார்.

# வண்டலூர் ஓட்டேரி காவல் நிலைய புதிய கட்டடத்தை, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக திறந்து வைத்தார்

மண்ணிவாக்கம், செப்.24-




செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர காவல் எல்லைக்குட்பட்ட, வண்டலூர் ஓட்டேரி காவல் நிலையம், மண்ணிவாக்கம், வாலாஜாபாத் சாலை ஓரத்தில் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வந்தது.

இந்த கட்டடம் உரிய இட வசதியும், வெளிச்சமும் இல்லாமல், குறுகலான பரப்பை உள்ளடக்கி இருந்ததால், காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டும் என, கடந்த 2020ல் கோரிக்கை எழுந்தது.

இதையடுத்து, மண்ணிவாக்கம் வாலாஜாபாத் சாலை மற்றும் வெளிவட்டச் சாலை இணையும் இடத்தில், ரூ 2 கோடி செலவில், நவீன வசதிகளுடன், புதிய கட்டடம் கட்ட, கடந்த 2023ல் திட்டம் வகுக்கப்பட்டது.

பின், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தால், கடந்த 2024ல், கட்டுமான பணிகள் துவக்கப்பட்டு, கடந்த மாதம் அனைத்து பணிகளும் நிறைவடைந்தன.

இதையடுத்து, வண்டலூர் ஓட்டேரி காவல் நிலையத்தின் புதிய கட்டடத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வீடியோ கான்பரன்ஸ் வாயிலாக நேற்று திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் செங்கல்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வரலெட்சுமி மதுசூதனன் கலந்து கொண்டு புதிய காவல் நிலையம் கட்டடத்தை குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து பார்வையிட்டனர்.இந்த காவல் நிலையத்தில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களை நிறுத்த விசாலமான 'பார்க்கிங்' வசதியுடன், மாற்றுத் திறனாளிகள் எளிதாக வந்து செல்லும்படி, சாய்வு தளங்களுடன் காவல் நிலைய புதிய கட்டடம் உருவாக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர காவல் உயர் அதிகாரிகள், மண்ணிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் கெஜலட்சுமி சண்முகம், ஒன்றிய செயலாளர் எம்.டி.லோகநாதன், ஒன்றிய கவுன்சிலர் சோமசுந்தரம், துணைத் தலைவர் சுமதி லோகநாதன், உட்பட பலர் பங்கேற்றனர்.



■ மதுரை திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் நிலையூர் ஊராட்சிக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை தாசில்தார் கவிதா,வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில் மணி, ஆகியோர் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தனர்.முகாமில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சித்ரா,ஊராட்சி செயலாளர் பரமசிவம்,மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களைபெற்றனர். இம்முகாமில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ தென்காசி மாவட்டத்திற்கு வருகை புரிந்த முன்னாள் இந்திய குடியரசுதிற்கு தலைவர் ராம்நாத் கோவிந்த் மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர் அருள்மிகு காசி விஸ்வநாத ஸ்வாமி திருக்கோவில் முன்பு நேற்று பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

இளம் சாதனையாளர்களுக்கான பிரதம மந்திரியின் கல்வி உதவித் தொகைதிட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், சீர்மரபினர் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த

# மாணவ/ மாணவியர்கள், தேசிய கல்வி உதவித்தொகை பெறுவதற்கு என்ற இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பித்து பயன்பெறலாம்

## மாவட்ட ஆட்சியர் கா.பெற்கொடி, தகவல்

சிவகங்கை, செப்.24-




இளம் சாதனையாளர்களுக்கான பிரதம மந்திரியின் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் PM- YASASVI- Top Class Education in Schools for OBC, EBC & DNT Students கல்வி உதவித்தொகை பெற தேசியகல்வி உதவித் தொகை இணையதளத்தில் (National Scholarship Portal) விண்ணப்பிக்கலாம் எனவும், பிற்படுத்தப்பட்டோர், (BC/EBC/DNC) பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், சீர்மரபினர் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கிட பிரதம மந்திரியின் கல்வி உதவித் தொகை திட்டம் PM-YASASVI- Top Class Education in Schools for OBC, EBC, & DNT Students மத்திய அரசால் செயல்படுத்தப்படவுள்ளது.

மேலும், 2025-26ஆம் ஆண்டிற்கு தேசிய கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க பட்டியலிடப்பட் (Top Class Schools) பள்ளிகளில் பயிலும் தமிழகத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு இக்கல்வி உதவித் தொகை வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் விண்ணப்பிக்க பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2.50 இலட்சம் இருத்தல் வேண்டும். மாணவர்கள் 30.09.2025ம் தேதிக்குள் விண்ணப்பித்து கொள்ள வேண்டும்.

அதனடிப்படையில், புதுப்பித்தல், தொடர்பாக இத்திட்டத்தின்கீழ் கடந்த நிதியாண்டில் பயனடைந்த மாணவ, மாணவியர்கள் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (https://scholarships.gov.in) (National Scholarship Portal) Renewal Application என்ற இணைப்பில் (Link ) மற்றும் OTR Number (One Time Registration) பதிவுசெய்து 202526 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பத்தினை புதுப்பித்து கொள்ள வேண்டும்.

மேலும், இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் புதியதாக விண்ணப்பிக்க விரும்பும் 9 மற்றும் 11 ஆம் வகுப்புகளில் பட்டியலிடப்பட்ட பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள், தேசிய கல்வி உதவித் தொகைத் தளத்தில் தங்களது கைப்பேசிஎண் (Mobile Number) மற்றும் ஆதார் விவரங்களை உள்ளீடு செய்தால் OTR Number and Password பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு வரப்பெற்று, OTR Number பயன்படுத்தி 2025-26 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகைக்கு உரிய ஆவணங்களை பதிவேற்றம் செய்து, புதிய விண்ணப்பம் (Fresh Application) விண்ணப்பிக்க வேண்டும்.

மேற்படி, பட்டியலிடப்பட்ட பள்ளிகளின் விவரங்களை அறிந்திட தொடர்புடைய முதன்மை கல்வி அலுவலர்களை தொடர்வு கொள்ளவும், மேலும், கூடுதல் விபரங்கள் அறிந்திட National Scholarship Portal (https://scholarships.gov.in) என்ற இணையதளத்தினை அணுகி கல்வி உதவித்தொகையினை பெற்று பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161